Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, APRIL 24, 2024

புதன்கிழமை ஏப்ரல் 24, 2024 | ஒளி: 09 கதிர் 237 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## மைத்திரிபால இராஜினாமா?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராஜினாமா செய்யத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நீதிமன்றத்தின் தடையுத்தரவுக்கு உள்ளாகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து மைத்திரிபால சிறிசேன விலகுவார் என்றும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் யாப்பின் பிரகாரம் கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகும் தலைவர், கட்சியின் போஷகர் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

தற்போதும் கட்சியில் கடும் கருத்து மோதல் நிலவி வரும் நிலையில், இரு பிரிவினரும் இரண்டு பதில் தலைவர்களின் பெயர்களைக் கூறி தேர்தல் ஆணையத்திடம் கடிதம் கையளித்துள்ளனர்.

இந்த நியமனங்களுக்கு எதிராக அதே கட்சியைச் சேர்ந்த பலரும் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்துள்ளன.



## "கோமைழகளாக தப்பித்து ஓடிவிடாதீர்கள்"

### விவாதத்துக்கு தயார் என்று சகோதரர்களுக்கு அறிவித்தார் சஜித்



பொருளாதாரத்துறையில் விவாதத்திற்கு வருமாறு நளின் பண்டார, சகோதரர்களுக்கு சவால் விடுத்தபோது, பொருளாதார நிபுணர்களின் விவாதத்தில் இருந்து தப்பிய சகோதரர்கள் மீண்டும் தலைவர்களுக்கு இடையில் விவாதத்திற்கு வருமாறு சவால் விடுத்தனர். இந்த இரண்டு விவாதங்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி மே மாதத்தில் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ரொஷானும் ஜனாதிபதி களத்தில் குதிப்பார்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்கவும், ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என தேசிய ஜனநாயக முன்னணி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தலுக்கு 22 மாவட்டங்க ளிலும் தமது கட்சியின் வேட்பாளர்கள் நிறுத்தவுள்ளதாக அக்கட்சியின் தலைவர் ருவன் மலிந்த மேலும் தெரிவித்துள்ளார்.

ஊழலுக்கும் வீண்விரயத்துக்கும் எதிரான பலரும் தமது கட்சியில் எதிர்காலத்தில் இணையவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



## "அரசியல் தீர்வுக்கும் த.தே.கூவினர் வருவர்"

### ஈ.பி.டி.பி. நம்பிக்கை

அபிவிருத்தி விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தற்போது எடுத்துள்ள முடிவு போன்று அரசியல் உரிமை பிரச்சினைக்கான தீர்வு விடயம் தொடர்பிலும் அவர்களிடம் மாற்றம் ஏற்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டை அபிவிருத்தி பாதையில் முன்னெடுத்து செல்வதற்கு தன்னுடன் இணைந்து பயணிப்பவர்களுக்கு மட்டும் தனக்காக ஒதுக்கப்பட்டுள்ள விசேட நிதியிலிருந்து ஒதுக்கீட்டை செய்து கொடுப்பதற்கு தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.



தொடர்ச்சி P2

காணி, வீட்டுத்திட்டம் தொடர்பில்

# "முகவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்"

### இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கோரிக்கை

"பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்களின் பெயரை பயன்படுத்தி, வீட்டுதிட்டத்தில் காணி தருவதாக கூறி பணம் கேட்பவர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யுங்கள்

"மக்களிடம் இருந்தும், பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் ஊடாகவும் தகவல்களைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம்

"25 ஆயிரம் வீட்டுத்திட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அதனை 50 ஆயிரம் வீட்டுத்திட்டமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது



க.அகரன்

ஜனாதிபதியின் திட்டத்துக்கு அமைய வடக்குக்கு 50 ஆயிரம் சோலர் பவர் வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்களின் பெயரை பயன்படுத்தி, வீட்டுதிட்டத்தில் காணி தருவதாக யாராவது பணம் கேட்பார்கள் என்றால், அவர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யுங்கள் என கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை(23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்த பின்பும் எமது மக்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு என்பன கனவு போன்றே இருந்தது. இது சம்பந்தமாக பல அமைச்சர்கள் செயற்பட்டிருந்தாலும் அது பூரணப்படுத்தப்படவில்லை என்றார்.

தொடர்ச்சி P2

## போலிகளை தயாரித்த ஒரு ஜோடி சிக்கியது



மோட்டார் வாகன திணைக்களத்தின் போலி முத்திரைகள், தற்காலிக சாரதி அனுமதிப்பத்திர ஸ்டிக்கர்கள் போன்ற போலி ஸ்டிக்கர்கள் மற்றும் போலி ஆவணங்களுடன் பதுளையில் ஒரு ஜோடி சிக்கியுள்ளது.

43 வயதுடைய சந்தேகநபரும் 22 வயதுடைய யுவதியும் செவ்வாய்க்கிழமை (23) கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அகரப்பத்தனை மற்றும் பூண்டுலோயா பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும், ஆனால், அவர்களுடைய தேசிய அடையாள அட்டைகளில் நான்கு மாகாணங்களின் முகவரிகளாக குறிப்பிடப்பட்டு உள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கணவன் மனைவி போல் நடித்து, பதுளை, கனுபலெல்ல, தலதாஎல வீதியில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து, அங்கிருந்து, இந்த போலி ஆவணங்களை பயன்படுத்தி, இருவரும் மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

வங்கிக் கடன்களுக்கான போலி ஆவணங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை

## நீந்தி கடக்க முயன்றவர் நடுக்கடலில் உயிரிழப்பு

### உடன் நீந்திய 30 பேரும் முயற்சியை கைவிட்டனர்

றொசேரியன் லெம்பட்



தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை தொடர் ஓட்ட முறையில் நீந்தி கடக்க முயன்ற பெங்களூருவைச் சேர்ந்த முதியவர் நடுக்கடலில் நெஞ்சு வலி காரணமாக உயிரிழந்தார்.

இலங்கை தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை உள்ள 30 கிலோ மீற்றர் தூரம் பாக் ஜலசந்தி கடல் பகுதியை சமீப காலமாக வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களை சேர்ந்த பல நீச்சல் வீரர்கள் நீந்தி கடந்து சாதனை படைத்து வருகின்றனர்.

தொடர்ச்சி P2

## மத்திய வங்கியின் விசேட அறிவிப்பு

நாட்டில் பிரமிட் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அடையாளம் காணப்பட்ட பல நிறுவனங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த நிறுவனங்கள் மீது சட்டத்தை அமுல்படுத்துமாறு சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரமிட் திட்டங்களில் ஈடுபடுவது தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும் அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கிக்கு கிடைத்த முறைப்பாடுகளின்படி, வங்கிச் சட்டத்தின் 83 (c) பிரிவை மீறி பின்வரும் நிறுவனங்கள்/நிறுவனங்கள் தடைசெய்யப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துகின்றனவா என்பதைக் கண்டறிய மேற்கண்ட வங்கிச் சட்டத்தின்படி விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## பதில் துப்பாக்கி சூட்டில் இருவர் பலி

பொலிஸார் நடத்திய பதில் துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியாகியுள்ள சம்பவம் பாதுக்க பிரதேசத்தில், செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்றது.

பாதுக்க மொரகஹஹேன வீதியின் மில்லவ புவக்வத்த என்ற இடத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பியோடிய முச்சக்கரவண்டி மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இருவர் மரணமடைந்தனர். அதில், குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீபே தெலுகெட்டிய பொலிஸ் வீதி சோதனை சாவடியில், முச்சக்கரவண்டியை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை செய்த போதிலும், முச்சக்கரவண்டியை நிறுத்தாது. அதில் இருந்தவர்கள், பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

## காஸ் விலை குறையும்?

எரிவாயு இறக்குமதி செய்யும் நாடுகள் தற்போது முகங்கொடுக்கும் நெருக்கடிகள் தீர்க்கப்பட்டால் உலக சந்தையில் எரிவாயுவின் விலை குறையும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார். சமையல் எரிவாயு விலைகள் குறைக்கப்படுமாயின், அதன் நன்மைகள் இந்நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் என்றார்.



## இஞ்சி ரூ.3,000

ஷேன் செனவிரத்ன

கண்டி பொதுச்சந்தையில் இஞ்சிக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. ஒரு கிலோ கிராம் இஞ்சி 3,000 ரூபாய்க்கும் 3,200 க்கும் இடையில் விற்கப்படுகின்றது. இதனால், பல்பொருள் அங்காடிகளில் மட்டுமே இஞ்சி விற்கப்படுகிறது. எனினும், அங்கு இஞ்சியின் விலை காட்சிப்படுத்தப்படுவதில்லை என்றும் அறியமுடிகின்றது.



PAGE 1 தொடர்ச்சிகள்

# "கோழைகளாக தப்பித்து ஓழிவிடாதீர்கள்"

பொருளாதார வல்லுநர்கள் மற்றும் தலைவர்களுக்கு இடையிலான இரண்டு விவாதங்களுக்கும் தாம் தயாராக இருப்பதாகவும், இதிலிருந்து தப்பியோடாமல், இந்த இரண்டு சவால்களையும் ஏற்றுக்கொள்ளுமாறும், கோழைகளாக தப்பித்து ஓடாது, விவாதத்திற்கு வருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேட்டுக்கொண்டார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 162ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், ஹம்பாந்தோட்டை, வீரகெட்டிய, ஒகண்தயாய மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (23) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார வல்லுநர்கள் மத்தியிலான விவாதத்திற்கு முடியாது என கூறுவது அவர்களின் பொருளாதார வல்லுனர்களால் நாட்டுக்கான சரியான பொருளாதார பார்வையை முன்வைக்க முடியாமையினாலா? என்ற பிரச்சினை எழுகிறது. எனவே, கடிதம் அனுப்பாமல் மே மாதம் இரு விவாதங்களுக்கும் வாருங்கள். அதே போல் விவாதங்கள் நடத்துவது போலவே, வெறும் வாய்வீராப்பு காட்டாமல் மக்களுக்கு சேவை செய்து காட்டுங்கள். பிரயோக ரீதியான தலைவர்களே நாட்டிற்குத் தேவை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வீராப்பு பேச்சுக்களால், பொய்களால் மக்கள் சலிப்படைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தி பேச்சுக்கும், மக்கள் பணிக்கும் தயாராக இருப்பதால், அஞ்ஞாது விவாதத்திற்கு வருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

சிங்களம் மட்டும், தமிழ் மட்டும் என்று சொல்பவர்கள் தங்கள் வாக்குப்பெட்டியை நிரப்புகிறார்களே தவிர கல்வியை மேம்படுத்தவில்லை. இதன் காரணமாக, ஒரு மொழிக்குள் சிக்குண்டு பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் இளைஞர் யுவதிகள் வேலையின்றி வேலையின்மை வரிசையில் நிற்கின்றனர். இம்முறைமை மாற்றப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

முயற்சியாண்மைகளை உருவாக்கும் அறிவு பாடசாலை கல்வியிலும் வழங்கப்பட வேண்டும். பாடசாலை பருவத்தில் இருந்தே முயற்சியாண்மை கல்வியும் புகட்டப்பட்டு ஒரு மில்லியன் தொழில்முனைவோரை உருவாக்க நாம் எமது ஆட்சியில் நடவடிக்கை எடுப்போம். இதற்குத் தேவையான அபிவிருத்திகள், வளங்கள் மற்றும் நிதி வசதிகள் சலுகை விலையில் வழங்க நாம் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

# அரசியல் தீர்வுக்கும் த.தே.கூவினர் வருவர்"

> **அரசியல் தீர்வு விடயத்திலும் எம்மைப் போன்ற அவர்கள் தெளிவாக நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்**

ஜனாதிபதியின் குறித்த கூற்றை ஏற்று தற்போது அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீட்டை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட பலர் ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுள்ளனர்.

ஈ.பி.டி.பியினராகிய நாம் முன்னெடுத்தவரும் கோட்பாட்டையொத்த இவர்களது இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது. இதேநேரம் அவர்கள் அபிவிருத்தி தொடர்பில் எடுத்த இந்த நிலைப்பாடு போன்று அரசியல் தீர்வு விடயத்திலும் எடுக்க வேண்டும். ஏனெனில், நாம் பாராளுமன்ற ஜனநாயக அரசியலில் காலடியெடுத்து வைக்க ஆரம்பித்த காலத்திலிருந்து மக்களின் அவசிய தேவைகள் முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் அதனூடாக படிப்படியாக அரசியல் உரிமை குறித்து முன்னேற முடியும் என்று வலியுறுத்தி வந்திருந்திருக்கின்றோம் என்றார்.

அதனடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் குறிப்பாக யாழ்ப்பாணம் கிளிநொச்சியை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினகளான சிவஞானம் ஸ்ரீதரன், சித்தார்த்தன் போன்றோரும் அதேபோன்று வன்னிப் பிரதேசத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், உள்ளிட்ட இன்னும் சிலரும் ஜனாதிபதியின் கருத்தை எற்று அவருடன் இணைந்து பயணிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது போன்ற நிலைப்பாட்டுடன் நிதி ஒதுக்கீட்டை பெற்றுள்ளனர்.

தங்களுடைய கூட்டுக்குள் இருக்கின்ற குழப்பங்களால் மக்களால் ஒதுக்கப்படுவோம் என்ற அச்சத்தினால் எவ்வாறெல்லாம் விமர்சனங்களை முன்வைத்தார்களோ அந்த ஜனாதிபதியிடம் சென்று நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டுடன் தாமும் இணைந்து செயற்பட தமக்கும் அபிவிருத்திக்கான பங்கை தருமாறு கோரி பெற்றிருப்பது வரவேற்கக் கூடிய விடயமாக இருந்தாலும் அரசியல் தீர்வு விடயத்திலும் எம்மைப் போன்ற அவர்கள் தெளிவாக நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பதில் துப்பாக்கி சூட்டில்...

இதன்போது, சந்தேகத்தின் பேரில் வந்த முச்சக்கரவண்டியை பொலிஸார் துரத்திச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளதாகவும், மேலும் ஒருவர் அருகில் உள்ள ரப்பர் தோட்டத்திற்கு தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் கைத்துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# "முகவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்"

எமது மாவட்டத்தின் வீட்டுத் திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், வீதி புனரமைப்பு உள்ளிட்ட பல்வேறான தேவைப்பாடுகள் தொடர்பாக நாம் ஜனாதிபதியிடம் தொடர்ச்சியாக எடுத்துரைத்தோம். இந்நிலையில், கடந்த காலங்களில் பல்வேறு வீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதை போன்று தற்போது வடக்கிற்கு சோலர் பவர் வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

35 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுத் திட்டம் இதன் மூலம் பயனாளிகளுக்கு கிடைக்கவுள்ளது. வடக்கு மாகாணத்திற்கு 25 ஆயிரம் வீட்டுத்திட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அதனை 50 ஆயிரம் வீட்டுத்திட்டமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட மட்டத்தில் எடுக்கப்பட்ட தகவல்கள் 25 ஆயிரத்தையும் கடந்து சென்றதால் 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வடக்கில் வீடற்ற எவரும் இனி இருக்க முடியாது. உப குடும்பங்கள் அனைவருக்குமே இதன் மூலம் வீட்டுத்திட்டம் கிடைக்கும் என்றார்.

வீட்டுத்திட்டம் மட்டுமன்றி, எமது மாவட்ட மக்களுக்கான மின்சார இணைப்புக்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக நாம் மக்களிடம் இருந்தும், பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் ஊடாகவும் தகவல்களைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

காணி மற்றும் வீட்டுத்திட்டம் தொடர்பாக முகவர்களிடம் பணம் செலுத்தி ஏமாறாது அது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருங்கள் என்றும் கேட்டுக்கொண்டார்.

# போலிகளை தயாரித்த ஒரு ஜோடி சிக்கியது

இவ்வாறு பெறப்பட்ட பணத்தில் ஒரு இலட்சத்து எழுபதாயிரம் ரூபாயை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அவர்களால் தயாரிக்கப்பட்ட போலி ஆவணங்களைப் பயன்படுத்தி அரச வங்கியில் ஏழு இலட்சம் ரூபாய் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# நீந்தி கடக்க முயன்றவர் நடுக்கடலில் உயிரிழப்பு

இந்நிலையில், தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை நீந்தி கடப்பதற்கு இந்திய, இலங்கை இரு நாட்டு அரசிடம் உரிய அனுமதி பெற்று 31 பேர் கொண்ட குழு ராமேஸ்வரத்தில் இருந்து படகு மூலம் புறப்பட்டு தலைமன்னாரை திங்கட்கிழமை (22) சென்றடைந்தது.

அங்கிருந்து செவ்வாய்க்கிழமை (23) அதிகாலை சுமார் 12.10 மணியளவில் கடலில் குதித்து தொடர் ஓட்டம் முறையில் நீந்த தொடங்கினர்.

அப்போது சரியாக மூன்று மணியளவில் தொடர் ஓட்ட நீந்துதலில் மூன்றாவது இடத்தில் இருந்த பெங்களூரை சேர்ந்த கோபால் ராவ் (78) என்பவருக்கு திடீரென நடுக்கடலில் நெஞ்சுவலி ஏற்பட்டது.

இதனையடுத்து, அவரை பரிசோதித்த மருத்துவக் குழு நெஞ்சு வலி காரணமாக கோபால் ராவ் உயிரிழந்ததை உறுதிப்படுத்தினர் .

இதனையடுத்து, கோபால் ராவ் உடலை தனுஷ்கோடி பாலம் மீன்பிடித் துறைமுகத்திற்கு எடுத்து வந்த பின்னர் உடற்கூறு ஆய்வுக்காக ராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுச்சென்றனர்.

உடன் வந்த நபர் ஒருவர் உயிரிழந்ததால் 30 பேரும் மன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல் முனை வரை நீந்தி கடந்து சாதனை படைக்கும் முயற்சியை கைவிட்டனர்.

கோபால் ராவ் உயிரிழந்தது தொடர்பாக ராமேஸ்வரம் மரைன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மத்திய வங்கியின் விசேட அறிவிப்பு

> **சட்டத்தால் தண்டிக்கப்படக் கூடிய இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து விலகிக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளோம் என்றும் இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது**

இந்த விசாரணை அறிக்கைகளின்படி, பின்வரும் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள்/விண்ணப்பதாரர்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 83 (47) க்கு முரணாகச் செயற்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

மேலும், பிரமிட் திட்டங்கள் என்று அழைக்கப்படுவதற்கு எதிராக வங்கிச் சட்டத்தின் பிரிவு 83(c) இன் கீழ் குற்றவியல் நடவடிக்கைகளை மாற்றுவது குறித்து பரிசீலிக்குமாறு கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன என்பதையும் நாங்கள் தெரிவிக்கிறோம். பிரமிட் திட்டங்களில் ஈடுபடும் எட்டு நிறுவனங்களின் பெயர்களையும் வெளியிட்டுள்ளது.

1. Beecoin App/Sunbird Foundation
2. Fast Win (Pvt) Ltd
3. Fruugo Oline App/Fruugo Oline (Pvt) Ltd
4. Genesis Business School/Era Miracle (Pvt) Ltd
5. Isimaga International (Pvt) Ltd
6. Ledger Block
7. Qnet/Questnet
8. Ride to Three Freedom (Pvt) Ltd 1988ஆம்

ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 83(c) இன் விதிகளுக்கு முரணாக எந்தவொரு நபராலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ திட்டங்களைத் தொடங்குதல், அத்தகைய திட்டங்களைத் தொடங்குதல், ஊக்குவித்தல், விளம்பரப்படுத்துதல், நடத்துதல், நிதியளித்தல். அல்லது அத்தகைய திட்டங்களை நிர்வகிப்பது அல்லது இயக்குவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

அத்தகைய குற்றத்திற்கான தண்டனையில் மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் சிறைத்தண்டனை அல்லது ஒரு மில்லியன் ரூபாய்க்கு மிகாமல் அபராதம் அல்லது அத்தகைய சிறைத்தண்டனை மற்றும் அபராதம் இரண்டும் அடங்கும்.

வேண்டுமென்றே அல்லது தெரிந்தே அல்லது அந்தச் செயலால் எந்த நபருக்கும் நஷ்டம் அல்லது சேதம் ஏற்படும் என்று தெரிந்தும் குற்றம் செய்தால், அந்த நபர் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத மற்றும் ஐந்து ஆண்டுகள் மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு மிகாமல் கடுமையான உழைப்புடன் கூடிய சிறைத்தண்டனைக்கு ஆளாவார். மில்லியன் ரூபாய்கள் அல்லது திட்டத்தின் பங்கேற்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்தத் தொகையின் இரண்டு மடங்கு மதிப்புள்ள இலங்கை நாணயத் தொகையானது இரண்டில் அதிகமான தொகைக்கு சமமான அபராதத்திற்கு உட்பட்டது.

இதன்படி, சட்டத்தால் தண்டிக்கப்படக் கூடிய இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து விலகிக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளோம் என்றும் இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பந்தய காருக்கு பலியான சிறுமி




எனது சிறிய சகோதரியின் வேண்டுகோளுக்கு இணங்க, எனது மாமாவும் எங்கள் தோட்டத்தைச் சேர்ந்த 27 பேரும் பஸ் பிடித்து தியத்தலாவில் கார் பந்தயம் பார்க்கச் சென்றனர்.

கார் பந்தயத்தைப் பார்ப்பதில் மிகுந்த விருப்பமுள்ள எங்கள் சிறிய சகோதரி, கார் பந்தயத்தின் போது எங்கள் மாமாவுடன் எங்களை விட்டுச் சென்றுவிட்டார் என உறவினர் சிவராஜ் கௌசல்யா கூறினார்.

தியத்தலாவ நரியகந்தவில் இடம்பெற்ற "Foxhill Super Cross Race" கார் விபத்தில் ஏழு பேர பலியாகினர். 21 பேர் காயமடைந்தனர். அதில், ஏழுவயதான சிறுமியும் அடங்குவார்.

சிவராஜ் கௌசல்யாவின் தாயாரின் சகோதரர் முத்துலிங்கம் உதயகுமார் மற்றும் முத்துலிங்கத்தின் மூத்த மகளின் மூன்றாவது குழந்தையான ஏழு வயது சிவகுமார் தினுஷிகா ஆகியோர் விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

டயரபாவத்தையைச் சேர்ந்த உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் திங்கட்கிழமை (22) தினுஷிகாவின் வீட்டில் ஒன்று கூடி தினுஷிகா மற்றும் தாத்தாவை இழந்த துயரத்தை வெளிப்படுத்தியும், தினுஷிகாவின் நினைவு தின நிகழ்வுகள் குறித்து பேசிக்கொண்டிருப்பதையும் காணமுடிந்தது.

நாங்கள் அங்கு சென்றபோதும் தினுஷிகாவின் தந்தை தியத்தலாவைக்கு சென்று தினுஷிகா மற்றும் அவரது தாத்தா ஆகியோரின் சடலங்களை எடுத்து வருவதற்கு சென்றிருந்தார். எனினும், தினுஷிகாவின் சடலம் கிடைக்கவில்லை.

இந்த துயரம் குறித்து தினுஷிகாவின் உறவினர் சிவராஜ் கௌசல்யா கூறியதாவது,

எனது தாயாரின் சகோதரர் தோட்டத்தில் கூலி வேலை செய்யும் முத்துலிங்கம் உதயகுமார். இவரது மூத்த மகள் சில காலத்திற்கு முன்பு இறந்து விட்டார். அவரது மூன்றாவது குழந்தை 7 வயதான சிவகுமார் தினுஷிகா, அவர் தனது மகளுக்கு மிகவும் விருப்பம் தினுஷிகாவிற்கு இரு சகோதரர்கள் உள்ளனர். டயரபாவத்தை தோட்டப் பாடசாலையில் 2ஆம் ஆண்டில் தினுஷிகா கல்வி பயின்று வருகின்றனர்.

எங்கள் சிறிய சகோதரி பாடசாலை வேலைகளை செய்வதில் அதிக விருப்பம். அவர் எப்போதும் பாடசாலை வேலைகளை முடித்துக்கொண்டு டி.வியில், கார் பந்தயம் மற்றும் கார்ட்டூன்களை பார்ப்பார். தாத்தாவைப் போலவே அவளது தந்தையும் தினுஷிகாவை மிகவும் நேசித்தார், அம்மாவின் இழப்பை அவரது உணர அவரது தந்தை அனுமதிக்கவில்லை. மகள் தினுஷிகா இல்லாமல் அவரது தந்தை எப்படி வாழ முடியும் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

டி.வி.யில் கார் பந்தம் காட்டப்பட்டபோது, அதைப் போய்ப் பார்க்க ஆசைப்பட்டார். இதை தனது தந்தை மற்றும் தாத்தாவிடம் சொன்னாள் தினுஷிகா. இன்னும் சொல்லப்போனால் எங்கள் தோட்டத்தில் இருந்த ஒரு கூட்டம் அந்த சின்ன சகோதரியின் வேண்டுகோளுக்கு இணங்க கார் பந்தயம் பார்க்க பஸ்ஸில் சென்றது.

தோட்டத்தைச் சேர்ந்த தினுஷிகா உள்ளிட்டோர் அன்றையதினம் காலையிலேயே சென்றுள்ளனர். இவர்கள் பந்தயம் நடகும் திடலின் ஓரத்தில் இருந்த நாற்காலிகளில் அமர்ந்திருப்பதாகவும் அங்கு சென்றவர்கள் தெரிவித்தனர்.

தாத்தாவின் மடியில் தினுஷிகா அமர்ந்திருக்கிறாள். ஒரு கார் கவிழ்ந்து தினுஷிகா அமர்ந்திருந்த நாற்காலியை தூக்கி வீசியதாக போட்டியை பார்க்க சென்றவர்கள் தெரிவித்தனர். அந்தச் சமயத்தில் தினுஷிகா என்ன உணர்ந்தாள் என்று தெரியவில்லை.

போய் வருவோம் என்று கடைசியில் சொன்னாள். ஆனால், தினுஷிகாவும் மாமாவும் இனி எங்கள் வீட்டுக்கு வர மாட்டார்கள். இனி டி.வி பார்க்க எங்கள் வீட்டுக்கு வர மாட்டார். கார் பந்தயங்களைப் பார்ப்பது அவருக்குப் பிடித்திருந்தது. என்று சிவராஜ் கௌசல்யா தெரிவித்தார்.

இந்த அனர்த்தத்தில் சிறுமியுடன் ஏழுபேர் உயிரிழந்தனர். அதில், போட்டி உதவியாளர்கள் நால்வரும் அடங்குவர். படுகாயமடைந்த 20 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் மூவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அனர்த்தம் தொடர்பில் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபரான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்நிலையில், தியத்தலாவ ஃபாக்ஸ் ஹில் சுப்பர் கிராஸ் போட்டியின் போது ஏற்பட்ட விபத்து தொடர்பில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவின் பணிப்புரைக்கு அமைய விசாரணை நடத்த 7 சிரேஷ்ட அதிகாரிகள் கொண்ட இராணுவ குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தியத்தலாவ நரியகந்தவில் இடம்பெற்ற "Foxhill Super Cross Race" கார் விபத்து தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வாகன சாரதிகள் இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பண்டாரவளை நீதவான் அன்டனி எஸ்.பீட்டர் ஃபால்ல் , திங்கட்கிழமை (22) உத்தரவிட்டிருந்தார்.

தியத்தலாவ நர்யகந்த ஃபோக்ஸ்ஹில் மோட்டார் பந்தயத்தில் கலந்து கொண்டு பந்தய இலக்கம் 5இன் கீழ் போட்டியிட்ட மாத்தறை மெதபாறை ஹித்தெட்டிய பிரதேசத்தை சேர்ந்த ரஞ்சித் உடுவிட்ட (36), பந்தய இலக்கத்தின் கீழ் போட்டியிட்ட பேராதனை மாகந்த பிரதேசத்தை சேர்ந்த ஏ.எம்.டிலான் சஞ்சீவ (47) போட்டி இலக்கம் 196 ஆகிய இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருட்களுடன் முன்னாள் கணக்காளர் கைது

பாறுக் ஷிஹான்

கல்முனை மாநகர சபையின் முன்னாள் கணக்காளராக பணியாற்றிய 39 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் போதைப்பொருளுடன் பெரிய நீலாவணை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருளுடன் மருதமுனை நகரை அண்டிய பகுதியில் கைதான சந்தேக நபர் ஒருவரின் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு பெரிய நீலாவணை பொலிஸார் துரித விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது ஐஸ் போதைப்பொருள் 840 மில்லி கிராமும், கேரளா கஞ்சா 4 கிராம் 540 மில்லி கிராமும் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் கணக்காளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேநபர் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க வழிநடத்தலில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# சிலைகள் பிரதிஷ்டை

செ.தி.பெருமாள்

சிவனொளிபாத மலை அடிவாரத்தில் உள்ள கல்ப்பருக்ஷ விகாரையில், 14 அடி உயரம் கொண்ட பித்தளை சமன் தெய்வ சிலை மற்றும் இரண்டு யானைகளின் சிலைகள் செவ்வாய்க்கிழமை (23) பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

அவை, கொழும்பு கங்காராம விகாரையில் இருந்து காலை ஊர்வலமாக கண்டி தலதா மாளிகைக்கு ஞாயிற்றுக்கிழமை (21) கொண்டு செல்லப்பட்டு தலதா மாளிகையில் இருந்து ஊர்வலமாக பேராதனை, கம்பளை, உலப்பனை, நாவலப்பிட்டி, கினிகத்தேன, வட்டவளை, ஹட்டன், டிக்கோயா, நோர்வூட், மஸ்கெலியா நகர் வழியாக சிவனொளிபாத மலை அடிவாரத்துக்கு திங்கட்கிழமை (22) காலை கொண்டுவரப்பட்டு கல்ப்பருக்ஷ விகாரையில் செவ்வாய்க்கிழமை (23) காலை, சுப வேளையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

# “திருடர்களுடன் டீல் இல்லை”

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

திருடர்களுடன் சேர்ந்து ஜனாதிபதி பதவியில் தானும் அமர்ந்தால் திருடர்களை பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். தான் அவ்வாறு திருடர்களின் தயவில் பதவிகளை ஏற்காததால், திருடர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையில்லை. தங்கள் நெருங்கிய நண்பர்களை பாதுகாத்து வருவதே இன்றும் கூட உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மைகள் வெளிவராமைக்கான காரணமாகும். இது குறித்து கர்தினால் கூட கருத்து வெளியிட்டுள்ளார். இவ்வாறான வன்முறை செயலையும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்களையும் தூசிக்கும் மதிப்பில்லாமல், மறந்து செயற்பட்டு வருகின்றனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.



பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 161ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், ஹம்பாந்தோட்டை, முல்கிரிகல, வீரகெட்டிய மீகஸ்ஆர மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஏப்ரல் 22ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் உரையாற்றியதாவது, தற்போது நாட்டு அரசியலில் நாய் சண்டை போல் அதிகாரத்தை கைப்பற்ற சதிகள் நடந்து வருகின்றன. இந்த சதிகளை மேற்கொள்ளும் பேராசை நாட்டின் கல்வியை கட்டியெழுப்ப வேண்டும் என்ற விடயத்தில் அற்பேனும் இல்லை. இவையனைத்தும் அதிகாரம் மற்றும் பதவிகளை பெற்றுக்கொள்ளும் ஆசையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போதைய ஆட்சியாளர் திருடர்களுடனும் நெருங்கிய நண்பர்களுடனும், சக கூட்டாளி அரசியல்வாதிகளுடன் நட்புறவு வைத்திருந்தாலும், நாட்டின் 220 இலட்சம் மக்களுடனே தான் நட்புறவு வைத்திருக்கிறேன்.

பூரண முடியாட்சியை தருவதாகச் சொன்னாலும், டீல் போட மாட்டேன். 220 இலட்சம் மக்களுடனே தனக்கு டீல் இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

1994ஆம் ஆண்டு மாவட்ட அமைப்பாளராக ஆரம்பித்து 2000ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரை 20 வருடங்கள், மக்கள் சேவையில் பயிற்சி பெற்றது ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலாகும். முன்னாள் ஜனாதிபதியினதும் பிரதமரினதும் மகன் என்ற வகையில் தம்பட்டம் அடித்துக் கொண்டு வாய்ப் பேச்சு வீராப்பால் முறைமையில் மாற்றத்தை கொண்டை வர முடியாது. எனவே, தான் அதனை நடைமுறையில் மேற்கொள்ள நினைத்தேன்.

முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தியது ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாமே.

‘பேட் மேன்’ என்று தான் அழைக்கப்பட்டாலும், அந்த போராட்டத்தில் ஓரளவு வெற்றி பெற்றேன்.

2019 ஜனாதிபதித் தேர்தலில், பெண்களின் ஆரோக்கியத் துவாய் பிரச்சினைகள் குறித்து பேசும்போது, அதனை அவமதித்து பேட் மேன் என்று அழைத்தனர். ஆனால், ஸ்கொட்லாந்து அனைத்து பெண்களுக்கும், நியூசிலாந்து சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவச ஆரோக்கிய துவாய் வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கின்றன. தன்னை எவ்வளவோ திட்டினாலும் அதனை பொருட்படுத்தாது இதற்காக குரல் எழுப்பியதன் பலனாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவிகளுக்கு இந்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்ட நிகழ்வில், பாடசாலையின் இதர தேவைகளுக்காக ஒரு இலட்சம் ரூபா நிதியை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரிடம் நன்கொடையாக வழங்கி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

# விகாரைக்கு எதிராக போராட்டம்

பு.கஜிந்தன்

யாழ். - தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் திங்கட்கிழமை(22) முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சட்டவிரோத விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

அதன்படி செவ்வாய்க்கிழமை (23) பௌர்ணமி வழிபாடுகள் விகாரையில் இடம்பெறவுள்ள நிலையில், அதற்கு



எதிர்ப்பை வெளிக்காட்டும் முகாமாக இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



அந்தப் போராட்டம் பிற்பகல் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

# சொகுசுக் காரில் மின்குமிழ்கள் திருட்டு

செ.திவாகரன், டி.சந்ரு

திம்புள்ள - பத்தன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, கொட்டகலை ஜெயராஜன் மாவத்தை பகுதியில் திங்கட்கிழமை (22) உரிமையாளரின் வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அதி சொகுசுக் காரில் முகப்பு மின்குமிழ்கள் இரண்டு திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட மின்குமிழ்கள் இரண்டும் தற்போதைய சந்தை பெறுமதி 350,000 ரூபாய் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக நுவரெலியா தடயவியல் பொலிஸார் மற்றும் மோப்ப நாயின் உதவியுடன் திம்புள்ள - பத்தன பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கம்பஹாவில் நீர்வெட்டு

கம்பஹா மாவட்டத்தின் சில பகுதிகளில் 12 மணித்தியால நீர்வெட்டு புதன்கிழமை (24) அமுல்படுத்தப்படவுள்ளது.


காலை 8.30 தொடக்கம் இரவு 8.30 வரை நீர் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

பேலியகொடை, வத்தளை, கந்தானை, ஜா-எல, கட்டுநாயக்க, சீதுவ நகர சபைக்குட்பட்ட பகுதிகள், களனி, மஹர, தொம்பே ஆகிய இடங்களிலும் மினுவாங்கொடை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகள் மற்றும் கம்பஹா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலும் இவ்வாறு நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

திருத்தப்பணிகள் காரணமாக நீர்வெட்டு அமுல்படு த்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.



# வாகன விபத்தில் மூன்று பேர் காயம்



எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் - குருணாகல் பிரதான வீதியின் கல்லடி பிரதேசத்தில் திங்கட்கிழமை (22) இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளத்திலிருந்து ஆனமடுவ பகுதிக்குச் சென்ற லொறியுடன் ஆனமடுவ பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற வேன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ள நிலையில், வேனுக்குப் பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் வேனில் பயணித்த சாரதி உட்பட மூவரில் இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஒருவர் சிறு காயங்களுக்குள்ளாகிய நிலையில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், லொறியின் சாரதியும் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இயல்பைவிட வெப்பம் அதிகரிப்பதால் அவதானமாக இருக்கவும்

நின்றுக்கொண்டிருந்தவர்கள், வீதியில் பயணித்தவர், மரதன் ஓட்டத்தில் பங்கேற்றிருந்தவரை ஊக்கப்படுத்தியவர் திடீரென மயங்கிவிழுந்து மரணமடைந்து விட்டார் என்ற செய்தியை அன்றாடம் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அவ்வாறு மயங்கி விழுந்தவர்கள், ஏதாவது நோய்வாய்ப்பட்டவர்களாக இருக்கக்கூடும். எனினும், இயல்பைவிட வெப்பம் அதிகரித்துள்ளமை குறித்து கவனம் செலுத்தவேண்டும்.

இந்தக் கோடையில் பொதுமக்கள் பல்வேறு உடல் உபாதைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அதனால், அவற்றிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகளை கையாள்வது சிறந்ததாகும்.

கோடை வெயிலால் அதிக வியர்வை வெளியேறும்போது உப்புச் சத்துப் பற்றாக்குறையும் நீர்ச்சத்துப் பற்றாக்குறையும் ஏற்படுகின்றன. இதனால் அதிக தாகம், தலைவலி, உடல் சோர்வு, தலைசுற்றல், தசைப்பிடிப்பு, குறைந்த அளவு சிறுநீர் வெளியேற்றம், மயக்கம், வலிப்பு போன்றவை ஏற்படலாம் என்று கூறப்படுகின்றது.

வெயிலின் தாக்கத்தால் வேர்க்குரு, அரிப்பு, தேமல், மணல்வாரி அம்மை, வயிற்றுப் பிரச்சினை போன்றவை ஏற்படும். தண்ணீரை அதிகம் குடிக்காதவர்களுக்குச் சிறுநீரகக் கல் வரக் கூடும். உச்சி வெயிலில் விளையாடும் குழந்தைகளுக்கு வலிப்பு வருவதற்கு சாத்தியம் உள்ளதென தெரிவிக்கப்படுகின்றது. கோடை வெப்பத்தால், பச்சிளம் குழந்தைகள், சிறு வயதுக் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் ஆகியோர் அதிக அளவு பாதிப்படையச் சாத்தியமுள்ளது.

சிறுநீரானது வெளிர் மஞ்சள் நிறத்தில் வெளியேறும் அளவில் தேவையான அளவு நீர் பருக வேண்டும். சூடான பானங்கள் பருகுவதைத் தவிர்க்க வேண்டும். அதிக அளவில் பழச்சாறு பருக வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அவை மட்டுமன்றி, வியர்வை எளிதாக வெளியேறும் வகையில் மிருதுவான, தளர்ந்த, காற்றோட்டமான பருத்தி ஆடையை அணிய வேண்டும். திறந்தவெளியில் வேலை செய்யும்போது தலையில் துண்டு அணிந்து வேலை செய்ய வேண்டும்.

சூரிய ஒளி நேரடியாகப் படும் ஜன்னல், கதவுகள் ஆகியவற்றைத் திரைச்சீலைகளால் மூட வேண்டும். இரவு நேரத்தில் குளிர்ந்த காற்று வருமாறு ஜன்னல்களைத் திறந்து வைத்துக்கொள்ளலாம். தினமும் காலை, மாலை அல்லது இரவில் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளனர்.

கடுமையான கோடை காலத்தில், மயக்கம், உடல் சோர்வு, அதிக அளவு தாகம், தலைவலி, கால், மணிக்கட்டு அல்லது அடிவயிற்றில் வலி ஏற்பட்டால் அருகிலுள்ள நபரை உதவிக்கு அழைக்க வேண்டும். மிகவும் சோர்வாகவோ மயக்கமாகவோ இருந்தால் மருத்துவ உதவியைத் தாமதிக்காமல் நாட வேண்டும் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் பாடசாலைகளில் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டாமென கல்வி அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. எனினும் அந்த அறிவுறுத்தல்களை மீறி பல பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

ஆங்காங்கே கொஞ்சம் மழை பெய்கிறது. இதனூடாக வெப்பம் கொஞ்சம், கொஞ்சமாக தணிகிறது. மழைவீழ்ச்சி குறைவதற்கும் வெப்பம் அதிகரிப்பதற்கும் இயற்கையின் மீது மனிதன் மேற்கொண்ட அடாவடித்தனமான செயல்களே பிரதான காரணமாகின்றன. எனவே, அவ்வாறான அடாவடித்தனத்தை குறைப்பதற்கு முயற்சிப்பதே சிறந்தது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# பலரது கைகளில் பந்தாடப்படும் சுதந்திரக் கட்சி



எம்.எஸ்.எம்.ஐயூப்

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் கடந்த 76 வருடங்களில் 40 வருடங்கள் தமது பெயரிலோ அல்லது கூட்டணி அமைத்தோ நாட்டை ஆட்சி புரிந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீலசு.க.) இன்று சந்தித்திருக்கும் நிலைமையைப் பார்க்கும் போது பரிதாபகரமாகவே இருக்கிறது. தமது வாக்கு வங்கியில் சுமார் 90 சதவீதத்தை 2016ஆம் ஆண்டளவில் புதிதாக நிறுவப்பட்ட ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியிடம் பறிகொடுத்துவிட்டு சிறிதாகச் சுருங்கிய ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி இப்போது இரண்டாகப் பிளவுபட்டு தலைமைக்காகவும் தலைமை அலுவலகத்துக்காகவும் சண்டை பிடித்துக் கொண்டு அலைந்து திரிகிறது.

1971இல் தமது கிளர்ச்சியை அடுத்து, சிறைசென்ற மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோஹண விஜேவீர 1977இல் சிறையிலிருந்து விடுதலையாகி புதியதொரு போராட்ட உத்தியை முன்வைத்தார். அதன்படி, அப்போது அதிகாரத்தில் இருந்த ஐக்கிய தேசிய கட்சியோடு நேரடியாகவே மோதாது நாட்டில் மூன்றாவது சக்தியாக இருந்த இடதுசாரி கட்சிகளின் சக்தியை முறியடித்து தாம் மூன்றாவது இடத்துக்கு வருவதென்றும் அதனை அடுத்து இரண்டாம் இடத்தில் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை தாக்கி வீழ்த்துவதென்றும் அதன் பின்னரே ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோடு நேரடி மோதலை ஆரம்பிப்பதென்றும் அவர் திட்டமிட்டார்.

இடதுசாரி கடசிகள் மிகக் குறுகிய காலத்திலேயே வீழ்த்தப்பட்டன. அதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சியைக் குறிவைத்த அவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் "இறுதிப் பயணம்" என்ற தலைப்பில் நாடு முழுவதிலும் உரைகளை நிகழ்த்தினார். எனினும், அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இறுதிப் பயணத்தை ஆரம்பிக்கவில்லை. அக்கட்சி அதன் பின்னரும் கூட்டணி அமைத்து 24 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்தது. இப்போது தான் அது உண்மையிலேயே இறுதிப் பயணத்தை அடைந்துள்ளது போல் தெரிகிறது.

இன்று அக்கட்சிக்குத் தலைவர் ஒருவர் இல்லாத நிலை உருவாகியிருக்கிறது. முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் ஸ்ரீலங்காவின் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்கவின் முறைப்பாடொன்றை அடுத்து நீதிமன்றம் ஸ்ரீல.சு.க. தலைவர் மைத்திரிபால சிறிசேன அப்பதவியில் கடமையாற்றக்கூடாது என்று இடைக்காலத் தடை விதித்துள்ளது. கட்சிப் பிரிந்து இரண்டு குழுவினர் இரண்டு பதில் தலைவர்களை நிமித்துக் கொண்டு இருக்கிறார்கள். கொழும்பு காலி வீதியில் அமைந்துள்ள கட்சித் தலைமையகம் பொலிஸாரால் மூடப்பட்டுக் காவலிடப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன, 2014இல் அக்கட்சியிலிருந்து பிரிந்ததில் இருந்தே அக்கட்சி சரியத் தொடங்கியது. 2015இல் அவர் ஐக்கியத் தேசிய கட்சியினதும் சந்திரிகாவினதும் உதவியோடு ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் அவரும் தம்மைப் போலவே சர்வாதிகாரியாக எதிரிகளிடம் பழிவாங்குவார் எனப் பயந்த மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியையும் அக்கட்சியின் தலைமையில் உருவாக்கப்பட்டுஇருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தலைமைப் பதவியையும் சுமுகமாகவே மைத்திரியிடம் கையளித்தார்.

ஆயினும் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் மஹிந்தவுக்கு விசுவாசமாகவே இருந்தனர். எனவே, 2016 பசில் ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியை ஆரம்பித்தபோது அவர்கள் அக்கட்சியல் இணைந்துகொண்டனர். சுதந்திரக் கட்சி என்ற பெயர்ப் பலகையும் சிறிதளவு ஆதரவாளர்களும் மட்டுமே மைத்திரியின் தலைமையை ஏற்றுக்கொண்டனர். ஆனால், அவர் ஜனாதிபதி என்பதால் அந்நாட்களில் அவர் பாரியளவில் பிரச்சினைகளை எதிர்நோக்கவில்லை. சிறிது காலத்தில் சந்திரிகா மைத்திரியை கைவிட்டார்.

மஹிந்த குழுவினர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினால் தமக்கு ஆபத்து வரும் என்றெண்ணிய மைத்திரி, 2018இல் ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் பதவியியலிருந்து நீக்கி மஹிந்தவை அவ்விடத்துக்கு நியமித்தார்.

நீதிமன்றம் அது சட்டவிரோதமான செயல் என்று தீர்ப்பளித்த போதிலும், அதனால் அவர் மஹிந்தவுடன் மீண்டும் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். 2020 பசிலின் பொதுஜன முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டுப் பாராளுமன்றத்தில் புகுந்துகொண்டார். அவரது கட்சியைச் சேர்ந்த நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர போன்றோருக்கு அமைச்சர் பதவியும் கிடைத்தது. கோட்டாபயவின் ஆட்சிக் காலத்தில் மைத்திரி புறக்கணிக்கப்பட்டார்.

எனவே, அவருக்கும் பொதுஜன முன்னணிக்கும் இடையே முறுகல் நிலை மீண்டும் அரம்பித்தது. அந்த நிலை ஓரளவுக்கு முற்றியபோது அவர் அமைச்சர் பதவிகளில் தொற்றிக் கொண்டு இருக்கும் தமது கட்சியைச் சேர்ந்தவர்களை அவற்றை கைவிடுமாறு அழுத்தம் கொடுத்தார். ஆயினும், பொது மக்களின் வரிப் பணத்ததில் சுகபோக வாழ்க்கை நடத்த வழிவகுக்கும் அப்பதவிகளைக் கைவிட அவர்கள் விரும்பவில்லை. இதேவேளை, சுதந்திரக் கட்சியைப் போலவே தமது வாக்கு வங்கியை ஐக்கிய மக்கள் சக்தியிடம் பறிகொடுத்த ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்காக வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். அதற்காக அவர் பல சலுகைகளை வழங்கி ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை அக்கட்சிகளிடம் இருந்து பறித்தெடுக்க முற்பட்டுள்ளார். அமைச்சுப் பதவிகளில் இருக்கும் பொதுஜன முன்னணியின் உறுப்பினர்களில் பலரை அவர் வளைத்துப் போட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், பலரை வெளிநாட்டுப் பயணங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களை நெருக்கமாக வைத்துக்கொண்டு இருக்கிறார். எனவே, தமது கட்சி உறுப்பினர்களுடன் தனிப்பட்ட தொடர்புகளை வைத்திருக்க வேண்டாம் என பசில், ரணிலிடம் கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

அதேவேளை, வரவு-செலவுத் திட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் ஆறு உறுப்பினர்களுக்கு ரணில் பணம் வழங்கியிருக்கிறார். அவர்கள் கட்சித் தலைமையிடம் அனுமதிப் பெறாது அப்பணத்தைப் பெற்றதால் அக்கட்சிக்குள் இப்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதேபோல் அமைச்சர் பதவிகளைப் பாதுகாத்துக்கொள்ள அமைச்சர்களாக இருக்கும் சுதந்திரக் கட்சிக்காரர்கள் மைத்திரியுடன் சண்டைக்கு வந்துள்ளனர். ஏதோ ஒரு காரணத்தக்காக சந்திரிகாவும் அவர்களுடன் சேர்ந்துள்ளார். சந்திரிகா ரணிலை வெகுவாக வெறுத்தவர். தமது மகனை ரோயல் கல்லூரியில் சேர்ப்பதைத் தடுத்தவர் ரணில் என்ற அவர் நீண்ட காலமாகக் கூறிக்காண்டு இருந்தார். இப்பொது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களின் மூலமாக அக்கட்சியை மைத்திரியிடம் இருந்து பறித்து ரணிலின் காலடிக்கு எடுத்துச் செல்ல அவர் உதவிபுரிகிறார்.

சந்திரிகாவின் வழக்கின் காரணமாக மைத்திரி கட்சித் தலைமைப் பதவியை தற்காலிகமாக இழந்துள்ள நிலையில், அண்மையில் அவ்வமைச்சர்கள் தாமே உண்மையான சுதந்திரக் கட்சிக்காரர்கள் என்று கூறிக்கொண்டு நிமல் சிறிபால டி சில்வாவை பதில் தலைவராக நியமித்துள்ளனர்.


மைத்திரியும் தந்திரம் தெரியாதவர் அல்ல. அவர் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வை விசேட விரிவுரையொன்றுக்கு என்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் கூட்டமொன்றுக்கு அழைத்தார். விஜயதாச அக்கூட்டத்துக்கு வந்த போது கட்சி உறுப்பினராகவும் இல்லாத அவரிடம் நீங்கள் எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரா? என்று கட்சி உறுப்பினர்கள் சிலர் கேட்டனர். விஜேதாசவும் மக்கள் கோரிக்கை விடுத்தால் அதனை பரிசீலிக்கத் தயார் என்று சுதந்திரக் கட்சி உறுப்பினரைப் போல் பதில் அளிக்கிறார். அந்தக் கேள்வியும் பதிலும் அந்த இடத்துக்கு எவ்வாறு வந்தன என்பதை நாம் தான் ஊகித்துக்கொள்ள வேண்டும்.

இதனை அடுத்து கடந்த ஞாயிற்றக்கிழமை மைத்திரியும் கலந்து கொண்ட கூட்டமொன்றில் விஜேதாச, சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டார். இப்போது இரண்டு பிரிவுகளில் இரண்டு பதில் தலைவர்கள் இருக்கிறார்கள். கட்சியின் தலைமைப் பதவி தொடர்பான வழக்கில் தமக்கு சாதகமான தீர்ப்பைப் பெறுவதற்காகவே மைத்திரி, நீதி அமைச்சரான விஜயதாசவை பதில் தலைவராக நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளார் என்று மைத்திரிக்கு எதிரான பிரிவில் இருக்கும் துமிந்த திசாநாயக்க கூறியிருக்கிறார். விஜயதாச நீண்ட காலமாகவே ஜனாதிபதியாவதற்குக் கனவு காண்பவர் என்பதே பலரது கருத்தாகும். அதேவேளை, அவர் அந்தக் கட்சியிலிருநது இந்தக் கட்சிக்கும் இந்தக் கட்சியிலிருந்து அந்தக் கட்சிக்கும் என்று தாவி சந்திரிகா பதவியில் இருந்த காலத்திலிருந்தே ஆட்சிக்கு வந்த ஒவ்வோர் அரசாங்கத்திலும் அமைச்சராக இருக்கிறார். இப்போது தாம் அங்கம் வகிக்கும் பொதுஜன முன்னணி எதிர்வரும் தேர்தல்களில் தோல்வியடைவது உறுதியாகிய நிலையில் அவர் அடுத்த கட்ட நடவடிக்கையாக ஏதோ திட்டமிட்டு சுதந்திர கட்சியில் இணைந்துள்ளார்.

ராஜபக்ஷக்கள் இருக்கும் வரை பொதுஜன முன்னணியின் மூலமோ ரணில் இருக்கும் வரை ஐ.தே.க மூலமோ சஜித் பிரேமதாச இருக்கும் வரை ஐக்கிய மக்கள் சக்தியின் மூலமோ தமக்கு ஜனாதிபதியாக முடியாது என்று அவருக்குத் தெரியும். மக்கள் விடுதலை முன்னணியை அவரால் நெருங்கவே முடியாது. எனவேதான் அவர் நெருக்கடியில் சிக்கியிருக்கும் சுதந்திர கட்சியைப் பிடித்துக்கொண்டுள்ளார்.

இப்போது பொதுஜன முன்னணி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவரை அக்கட்சியிலிருந்து வெளியேற்றினால் அவர் எம்.பி பதவியையும் அமைச்சர் பதவியையும் இழக்கலாம்.

எனினும், சுதந்திர கட்சியை பிளவுபடுத்தி அதில் ஒரு பகுதியை தம்மிடம் சேர்த்துக்கொள்ளும் நோக்கில் ரணில் இச்சந்தர்ப்பத்தில் விஜயதாசவின் உதவிக்கு வரலாம். ஒரு விடயம் மட்டும் உறுதியாக கூறலாம். இச்சிக்கலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்ட எவரும் மக்கள் நலன் கருதி இதில் சம்பந்தப்படவில்லை. எல்லாம் கோடிக் கணக்கில் பணத்தை அள்ளித்தரும் பட்டம் பதவிகளுக்காகத் தான்.



## வாழ்வியல் தரிசனம்

விஞ்ஞானி அல்பிரட் அணு ஆயுதத்தை கண்டுப்பிடித்தார். ஆனால், அதன் தாக்கத்தை உணர்ந்தவர்கள் இறுதியில் நன்கு உணர்ந்து தனது சொத்துக்களை உலகிற்கு வழங்கி விட்டார்.

அழிவுடன் நடக்கும் யுத்தம் கொடியது. இன்று அல்ல முற்காலத்திலிருந்தே நடந்த யுத்தங்களில் அனேகமானவை ஆணவப் போர் என்பது உண்மை.

யுத்தம் மூலம் தோற்ற நாடுகளின் போர் வீரர்கள் மட்டுமல்ல, ஒன்றுமே அறியாத மக்களின் உயிர்களும் காவு கொள்ளப்பட்டன. நாடும் பறிபோய் எல்லாமே இழந்தவர்கள் எதிலிகளாயினர். காலம் மாறியதும் சரித்திரங்களும் மாறின.

வென்ற மன்னர்களும் ஏதோ ஒரு வழியில் அதே சண்டைகள் மூலம் வினைப்பயனால் அழிவது காலம் சொல்லும் கதைகள். ஆசையூடாக, வன்முறை, அவா என்பது கெட்டதும், அறத்துக்கு முரணானது எனத் தெரிந்தும் அதே படுகுழியில் போய் விழுவது நடந்து கொண்டேயிருந்தது.

அழிவுடன் காணும் வெற்றிவெறி நிரந்தரமன்று!

-பருத்தியூர் பால வைரவநாதன்.

## கடிதங்கள்

### குடிநீர் தட்டுப்பாடு

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் வறட்சியான கால நிலையினால் குடி நீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீர்ப் பாவனையாளர்கள் குடி நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் யூ.கே.எம். முஸாஜித் செவ்வாய்கிழமை (23) தெரிவித்தார்.

தொடர்ச்சியான வறட்சியான கால நிலையினால் பிரதான நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறைந்து வருகின்றது.

இதனால் தற்போது குடிநீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும், வறட்சி நிலை தொடருமானால் நீர்த் துண்டிப்பு தொடருமெனவும் தெரிவித்தார்.

எனவே, நீர் பாவனையாளர்கள் குடி நீரை வேறு தேவைகளுக்கு பாவிக்காமல் குடிப்பதற்கு மட்டும் நீரை பயன்படுத்துமாறும் நீரை தாங்கியில் சேமித்து சிக்கனமாகவும், வீன் விரையமின்றியும் பாவிக்குமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை, சில பரதேசங்களில் குடி நீருக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதனால் பொது மக்கள் பல்வேறு அசௌகரீகங்களை எதிர் எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

-எம்.எஸ்.எம்.ஹனீபா

# மலையகம் தந்த மறவாத நினைவலைகள்





ச.பிரியதர்ஷன் குருஸ் (கோல்டன்)
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்
(செவ்வாய்க்கிழமை (22) தொடர்ச்சி)

> WhatsApp குழுமத்தை பார்த்த போது, அதன் கீழே ஓர் செய்தி “இன்று 10 மணிக்கு உங்களுக்கான விரிவுரை நடைபெற இருக்கின்றது. அனைவரும் தவறாமல் வருகை தரவும்” என்ற செய்தியும் எனது வட்சப்பிற்கு வந்திருந்தது. அவ்வாறே, சுற்றுலா முடிந்த பின் பல்கலைக்கழக விரிவுரைகளும் பழையபடி ஆரம்பமாகியது

அந்த கோபுரத்தின் உச்சத்தில் ஒரு செல்பி புகைப் படத்தை பதிவு செய்வதும் எங்கள் அணியின் நண்பர் ஒருவரின் விருப்பமாகவும் இருந்தது. அதன்படியே நண்பர்களுடன் பயணித்து ஒரு மாதிரியாக கோபுரத்தின் உச்சத்தை அடைந்தோம். கோபுரத்தின் உச்சத்தில் இருந்து கண்டி நகரையே முற்றாக பார்க்கக் கூடிய வண்ணம் இருந்தது அந்த காட்சி. அதேவேளை, கோபுரத்தின் உயரத்திற்கு செல்லச் செல்ல குளிர்காற்று உடலுக்குள் ஊடுருவிக்கொண்டே இருந்தது. இருந்தும் அந்த இடத்தில் பச்சைப்பசேலென காட்சியளித்த மலைகளையும் பார்த்துவிட்டு என்னுடன் வந்த நண்பனின் விருப்பப்படியே ஒரு செல்பி புகைப்படத்தையும் கோபுரத்தின் உச்சத்தில் வைத்து எடுத்துவிட்டு மீண்டும் மெது மெதுவாக இறங்கி கீழே வந்தோம்.

கீழே வந்து கோபுரத்தை மையமாக வைத்து சில புகைப்படங்களை எடுத்தோம். அதன் பின்னர் பல மணி நேரம் அங்கு செலவிட்டதால் மாலை ஆறு மணியை தாண்டியது. அங்கிருந்து அனைவரும் வேகமாக புறப்பட்டு பேருந்தில் ஏறினோம். எங்கள் சுற்றுலாப் பயணமானது கண்டி நகருக்கு பிரியாவிடை கொடுத்துவிட்டு நுவரெலியாவை நோக்கி புறப்பட ஆரம்பித்தது.

மலையேறிய களைப்பில் பலர் பேருந்துக்குள்ளேயே உறங்கி விட்டார்கள். கலகலப்பாக பயணித்த பேருந்து நுவரெலியா நோக்கி செல்கின்றபோது மிகுந்த அமைதியோடு செல்கிறது. ஏனென்றால், அனைவருக்கும் மிகுந்த உடல் அலுப்பு. இவ்வாறு மலைகளால் வளைந்து வளைந்து பயணித்துக் கொண்டிருக்கின்ற போது சிலருக்கு வாந்தி வேறு.

அவர்களுக்கெல்லாம் மாறி மாறி உதவி செய்துவிட்டு சில மணி நேரங்கள் கழித்து நுவரெலியாவை முற்றுகை இட்டோம். நாங்கள் சுற்றுலாவிற்குப் பயணித்த காலம் பனிக்காலம் என்பதால் அங்கு சென்றவுடன் கண்டியை விட கடுமையானகுளிர் எம் அனைவரையும் வாட்டி எடுத்தது. பல நண்பர்கள் கதைப்பதற்கு வாய் திறந்தால் சத்தம் வருவதற்கு முன்னால் புகைதான் வருகிறது. அந்தளவிற்கு பனியின் அகோரம். இருந்தும் நண்பர்களுடன் அந்த பனியிலும் சிலர் கதைத்து கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

இதன் பின்னர் விகாரைக்கு அருகில் உள்ள விடுதி ஒன்றினை தேடிச் சென்று அங்கு அனைவரும் தங்குவதற்கு தயாராகினோம். இதன்போது இதில் நகைச்சுவையான விடயம் என்னவென்றால் அங்கு சுற்றுலாப் பயணித்தவர்களில் பாதி பேர் குளிக்கவே இல்லை. ஏனென்றால், அந்தளவிற்கு கடுமையான குளிர் அனைவரையும் வாட்டி வதைத்தது. மறுநாள் குளிப்போம் என்ற எண்ணத்தில் பாணையும் பருப்பு கறியையும் வைத்து சாப்பிட்டு விட்டு எல்லாருமே உறங்கி விட்டோம். ஓர் இரவுப்பொழுதை அந்த குளிருக்குள் கடத்திவிட்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை எழுந்து அனைவரும் குளித்துவிட்டு இரவு தந்த அதே உணவான பாணையும, பருப்புக்கறியையும் காலையிலும் சாப்பிட்டுவிட்டு இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தில் சீதைக்கான ஒரு கோவில் என அழைக்கப்படும் ‘சீதா எலிய’ என்ற இடத்திற்கு எங்கள் பேருந்து புறப்பட்டது.

சில மணி நேரங்கள் கழித்து சீதா எலியவை அடைந்தோம். அங்கு அந்தக் கோயிலை தரிசித்து வணங்கி விட்டு அங்கே இருந்த ஒரு முதியவரிடம் இந்த கோயிலைப் பற்றி நான் விசாரித்தேன.

அப்போது அந்த முதியவர் “சீதா எலிய என்ற இந்த இடத்துலதான் தம்பி இராவணன் சீதையை சிறைப்பிடித்து வைத்திருந்தான் என்றும் இங்க உள்ள பாறைகளில் காணப்படும் வட்ட அழுத்தங்கள் எல்லாமே இராவணனின் யானையின் கால்தடங்கள்” என்று அவர் கூறினார். அவற்றையெல்லாம் கேட்டு அந்தக் கோயிலை சுற்றிப் பார்த்து விட்டு கீழே இறங்கிய போது ஒரு அழகான சிறு நதி அங்கு ஓடிக்கொண்டிருந்தது. அங்கு இறங்கி கால்களை நனைத்து விட்டு அந்த நதியிலும் சிறு புகைப்படங்களை எடுத்துக்கொண்டு எமது நண்பர் நண்பிகளுக்கு அந்த நதியில் ஓடிய நீரை தெளித்தும் நனைத்தும் விளையாடினோம். பின்னர் சீதா எலிய கோவிலுக்கு அருகில் உள்ள பிரதான வீதியில் அனைவரும் நின்று ஒரு குழுப் புகைப்படத்தையும் எடுத்துக்கொண்டோம். பின்னர் அங்கிருந்து பயணித்த பேருந்து நேரடியாக நுவரெலியாவில் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் இடமான ஏரிப் பூங்காவை நோக்கி சென்றோம்.

அங்கிருந்த கடைகளில் அனைவரும் சென்று குளிர் ஆடைகளையும் பனித் தொப்பிகளையும் வாங்கினார்கள். சிலர் அந்த குளிருக்குள்ளும் குளிர்களியை அருந்திக்கொண்டு சுற்றித்திரிந்தார்கள்.

நான் எனது நண்பர்களுடன் படகில் பயணிப்பதற்காக சென்றேன். அங்கு பல நண்பர்கள் மற்றும் நண்பிகளோடு படகில் பயணிப்பதற்கு ஆயத்தமான போது அதில் சிலர் பயந்து கொண்டு இருந்தார்கள். அவர்களையும் கூட்டிக்கொண்டு படகில் ஏற்றி ஏரியில் பயணித்தோம. ஏரியில் பயணிக்கின்ற சமயம் அனைவரும் நீச்சல் உடைகளை அணிந்து பயணித்துக் கொண்டிருந்தோம். அப்போது பல மெல்லிசை பாடல்களையும் பாடி கரங்களை தட்டி அந்த பயணத்தை மிகுந்த மகிழ்வு மிக்கதாக மாற்றினோம். அத்தோடு, அந்த ஏரியில் அதிவேகமாக மோட்டார் சைக்கிள் வடிவில் பயணிக்கின்ற சிறு படகில் எனக்கு செல்ல வேண்டும் என்ற ஆர்வம் மனதில் இருந்தது. இருந்தும் நான் அந்த படகில் செல்வதற்கான பணத்தை விசாரித்து அதற்கான அனுமதியைப் பெற்று அந்தப் படகில் அமர்ந்தேன். அந்தப் படகு ஒட்டுநர் தன்னை கவனமாக பிடித்துக் கொள்ளுமாறு கூறினார். அதில் பயணித்ததன் மகிழ்வு மனதளவில் சொல்ல முடியாதது. அதேவேளை, அந்த படகு ஓட்டுநர் மிகவும் திறமையான முறையிலே அந்தப் படகினை சரித்து உயர்த்தி சுற்றிக் கொண்டே இருந்தார. அந்த மோட்டார் வாகனத்தை வைத்து தரையில் செய்ய முடியாத சில விடயங்களை அவர் கடலில் வைத்துச் செய்து காட்டியது மனதிற்கு மிக அற்புதமாகவும் மகிழ்வாகவும் இருந்தது.

இந்த படகு பயணமானது சுற்றுலா பதிவில் ஒரு மறக்க முடியாத பதிவாகவும் மனதில் இடம் பிடித்தது.

இவ்வாறு அங்கிருந்த கடைகளினை சுற்றிப் பார்த்துவிட்டு அனைவரும் பேருந்தில் ஏறினோம். பேருந்தில் மீண்டும் ஆட்டமும் பாட்டமும் வழமை போலே ஒலிக்க தொடங்கின. சிறிது நேரத்தின் பின் நுவரெலியாவில் அமைந்துள்ள சுற்றுலாத்தலமான தபாற்கந்தோரை அடைந்தோம். தபாற்கந்தோரை பார்க்கின்ற தருணத்தில் வெளிநாட்டில் இருப்பது போன்ற ஓர் உணர்வும் அதேசமயம், அதன் கட்டிடக்கலை அம்சங்களும்மிகுந்த அழகாகவும் இருந்தது. எனவே, அங்கிருந்து தனிப் புகைப்படங்களையும் குழு புகைப்படங்களையும் எடுத்துக்கொண்டோம்.

அதன் பின்னர் அனைவரும் கொத்துக்கொத்தாக பிரிந்து மதிய உணவைத் தேடி சென்றோம். அங்கு ஒரு நல்ல கடையை தேடிப்பிடித்தோம். சுற்றுலாவின் இறுதி நாள் என்பதால் பிரியாணி எடுத்து அனைவரும் அதனை பகிர்ந்து உண்டோம். பின்னர் அங்கிருந்து தம்ரோ தேயிலை தொழிற்சாலைக்கு சென்றோம். அங்கு தேயிலை உற்பத்தி செய்வதை பார்ப்பதற்கு எங்களை அனுமதிக்கவில்லை இருந்தும் வீட்டிற்கு தேவையான தேயிலை பக்கெட்டுகளை வாங்கிக் கொண்டு அந்த தொழிற்சாலையை சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அதில் ஒரு குழுப் படத்தை பதிவு செய்துவிட்டு அங்கிருந்து சில நிமிடங்களில் பேருந்து ரம்பொட நீர்வீழ்ச்சியை நோக்கி புறப்பட்டது.

மாலைப்பொழுது என்பதால் ரம்பொட நீர்வீழ்ச்சியில் அதிகளவான நேரங்களை செலவு செய்தோம். அந்தக் குளிருக்குள் நன்றாக நீராடி விட்டு வெளியில் வருகிற போது சுட்ட சோளம் விற்கின்ற ஓர் அண்ணாவை கண்டோம். அங்கு அந்த அண்ணாவிடம் நெருப்பில் சுட்ட சோளத்தினை சுடச்சுட வாங்கி அனைவருமே உண்டோம். அந்தக் குளிருக்குள் அந்த சூடான சோளம் தந்த சுவை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது.

பின்னர் அனைவரும் நீராடிய ஆடைகளை மாற்றி விட்டு நுவரெலியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி எங்கள் பேருந்து புறப்பட ஆரம்பமானது.

இறுதி நாளின் இறுதித்தருணம் என்பதால் அந்த இரவு நித்திரை கொள்ளவில்லை. அனைவருமே பாடல்களை பாடி நகைச்சுவை கதைகளை சொல்லி ஒலிபெருக்கியில் செல்கின்ற பாடல்கள் அனைத்திற்கும் நடனங்களை ஆடி காலை நான்கு மணியளவில் அனைவருமே உறக்கத்திற்கு செல்கின்ற நிலை இருந்தும் இன்னும் சில நேரங்களில் யாழ்ப்பாணம் வந்துவிடும் என்று இன்னொரு குழு தங்களுடைய ஆடலையும் பாடலையும் மீண்டும் ஆரம்பிக்கின்றனர். அவர்களோடு நானும் இணைந்து கொண்டு அந்த நிமிடங்களை மிகுந்த மகிழ்ச்சி மிக்கதாக மாற்றியதோடு, மறுநாள் திங்கட்கிழமை காலை ஏழு மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுழைவாயிலை வந்தடைந்தோம்.

பின்னர் அங்கு அனைவரும் குழுவாக நின்று புகைப்படங்களை எடுத்துவிட்டு நண்பர்களோடு கைகுலுக்கி கட்டித்தழுவி Bye சொல்லிவிட்டு அனைவரும் எங்கள் விடுதிகளுக்கு புறப்பட்டோம். விடுதிகளுக்கு சென்று WhatsApp குழுமத்தை பார்க்கின்ற போது சுற்றுலாச் சென்ற படங்களை நண்பர்கள் பதிவிட்டு கொண்டே இருந்தார்கள். அதன் கீழே ஓர் செய்தி “இன்று 10 மணிக்கு உங்களுக்கான விரிவுரை நடைபெற இருக்கின்றது. அனைவரும் தவறாமல் வருகை தரவும்” என்ற செய்தியும் எனது வட்சப்பிற்கு வந்திருந்தது. அவ்வாறே, சுற்றுலா முடிந்த பின் பல்கலைக்கழக விரிவுரைகளும் பழையபடி ஆரம்பமாகியது.

# ‘மாதவிடாய் வறுமை’ பேசத் தயங்கும் விடயமல்ல





செ.ஆ.ஸபானா பானு,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைகழகம்.

இன்றைய சமூகமயமாதலில் அபிவிருத்தி பற்றிய பல்வேறு கருத்தியல்கள் உருவானாலும், பெண்களுக்கான முழுமையான உரிமைகளை அவர்களால் அனுபவிக்க முடிகின்றதா என்ற கேள்விக்கு பதிலைக் கொடுக்க முடியாதுள்ளது. பெண்கள் இச் சமூகத்தில் நாளாந்தம் எதிர்கொள்ளும் உடலியல், உளவியல் மற்றும் சமூகவியல் சார் பிரச்சினைகள் ஏராளமானவை. எனினும் அவ்வாறான பிரச்சினைகளில் அதிகம் பேசு பொருளாகாமல் இருக்கும் ஒன்றுதான் ‘மாதவிடாய் வறுமை (Period Poverty)’ உலகெங்கும் நாளாந்தம் 500 மில்லியன் பெண்கள் இப் பிரச்சினையால் பாதிக்கப்படுவதோடு, இலங்கையில் அதிலும் குறிப்பாகக் கிராமப்புறங்களில் அதிகமான பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

## மாதவிடாய் வறுமை என்றால் என்ன?

பூப்படைந்த பெண்களுக்குக் குறித்த வயது வரை ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் ஏற்படுகின்றது. இம் மாதவிடாய்க் காலத்தில் அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான ஆரோக்கியத் துவாய் (Sanitary Napkins), உள்ளாடைகள் (Underwears), மாதவிடாய் கப்கள் (Menstrual cups), டாம்பொன்கள் (Tampons) போன்றவற்றைப் பெற முடியாத நிலை ஏற்படும் போது அது மாதவிடாய் வறுமை எனப்படுகின்றது. இவை தவிர ஒழுங்கான துப்புரவு வசதிகள் மற்றும் மாதவிடாய் பற்றிய தெளிவூட்டல்கள் கிடைக்கப்பெறாமையும் இதனுள் அடங்கும். இதனை இல்லாதொழிக்கப் பல்வேறு சமூகச் செயற்பாட்டு நிறுவனங்கள் முன் நின்றாலும், இன்றும் பலபேரது மனநிலை மாதவிடாய் என்பது ஓர் உடலியல் நிலைமையெனப் பார்க்க முடியாத தன்மையிலேயே இருக்கிறது.

அநுராதபுர மாவட்டத்தில் கெபிதிகொள்ளாவ பிரதேசத்தின் சில கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி அதிக அளவிலான பெண்கள் இம்மாதவிடாய் வறுமைக்கு இன்றும் முகம் கொடுக்கின்றனர் என்பது தெளிவாகியது.

‘எனக்கு இப்போது 55 வயதாகின்றது. சுமார் 25 வருடங்களுக்கு முன்னரெல்லாம், என்னுடைய தாய் மாதவிடாய் ஏற்பட்டதிலிருந்து மூன்று நாட்கள் வரை ஓர் இடத்திலேயே அமர்ந்திருப்பார். காரணம், மாதவிடாயின் போது உதிரப்போக்கைக் கட்டுப்படுத்துவதற்கான வசதிகள் அப்போது இருக்கவில்லை. மாற்றுத் துணிகளுக்குக்கூட கஷ்டப்படும் நிலையே எங்கள் ஊரில் காணப்பட்டது. ஆனால், இப்போது நிறையத் துணிகள் இருக்கின்றன. பழைய ஆடைகளிலிருந்து மாதவிடாயின் போது தேவையானளவு துணிகளை வெட்டிப் பயன்படுத்துகின்றோம். அது துவைத்து பின், மீள பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்றது’

மேற்படி கருத்தானது, ஆரோக்கியத் துவாய்கள், நப்கீன்கள் மீதான ஆர்வத்திலும் பார்க்க பழைய துணிகளைப் பயன்படுத்துவதிலேயே குறிப்பிட்ட கிராமப் பகுதிகளிலுள்ள பெண்கள் இன்றும் கவனம் எடுக்கின்றார்கள் என்பதை உணர்த்துகிறது. எனினும், இக்கிராமங்களைப் பொறுத்தவரை தண்ணீர் வசதியானது தேவையானளவு குறைவின்றிக் கிடைக்கின்றது.

## மாதவிடாய் பொருட்கள் மீதான வரி

‘மாதவிடாயின் போது பயன்படுத்தக்கூடியக் பொருட்கள் அத்தியாவசியமானவையே தவிர, அவை விருப்பத்தின் பேரில் வாங்கப்படும் பொருட்களல்ல’ அவற்றின் மீது இலங்கை அரசாங்கம் விதித்துள்ள வரியானது, நாளாந்தச் சம்பளம் பெறுபவர்களின் அரைவாசித் தொகையளவை அண்மித்திருப்பதால் பல பெண்கள் அப்பொருட்களை வாங்காமல் விடக் காரணமாகியிருக்கிறது. பெண்பிள்ளைகளைக் கொண்ட வறிய குடும்பங்களில் மட்டுமின்றி நடுத்தரக் குடும்பங்களில் கூட நிலைமை இன்னும் மோசமாக உள்ளது.

2018க்கு முன்னர் இலங்கையில் மாதவிடாய் பொருட்களுக்கான வரி விதிப்பு வீதம் 101.2வீதமாகவிருந்தது. தற்போது அது 51.07வீதமாக அதிகரித்துள்ளது. இது மாதவிடாய்ப் பொருட்களின் கொள்வனவை அணுக முடியாதபடி செய்துள்ளது.

‘எனக்கு மாதவிடாயின் போது அதிகளவான உதிரப்போக்கு ஏற்படுவதால் ஒரு நாளைக்கு ஐந்து அல்லது ஆறு நப்கீன்களை பயன்படுத்த வேண்டியேற்படும். குறிப்பிட்ட மாதத்துக்கு மட்டும் எனக்கு இரண்டுக்கும் மேற்பட்ட நப்கீன் பைகள் தேவைப்படும். இரண்டு பிள்ளைகளை வைத்துக்கொண்டு செலவுகளை முகாமை செய்ய எனக்கு மிகச் சவாலாக இருக்கிறது. அவர்களும் மாதவிடாய்க்கு உள்ளாகின்றார்கள்.’ (37 வயதுடைய தாய்)

அத்தோடு, கடைகளில் பல விலைகளிலும் நப்கீன்கள் (Pads) கிடைக்கப் பெறுகின்றன. ஆனால், அவற்றின் தரம் கேள்விக்குறியாக உள்ளதுடன் அவற்றைப் பயன்படுத்துவது பற்றிய பயம் குறித்த கிராமப் பெண்களிடையே இருப்பது ஆய்வில் தெரிய வந்தது. அவர்கள் துணியைப் பயன்படுத்துவதையே பாதுகாப்பாகக் கருதுகின்றார்கள். அதுதவிர பெரும்பாலும் ஆய்வு செய்த கிராமங்களில் ஒரு சிலருக்கே மாதவிடாய் கப்கள், டாம்பொன்கள் பற்றித் தெரிந்திருந்தது.

அத்தோடு, பாடசாலை செல்லும் பிள்ளைகள் தற்போது நப்கின்களைப் பயன்படுத்துகிறார்கள். மாதவிடாய் பொருட்களுக்கான விலையேற்றங்கள் ஏற்பட்ட போதும் தம் பிள்ளைகளுக்கான வசதிகளைப் பெற்றோர்கள் செய்து கொடுக்கின்றனர். இருப்பினும், இலங்கையின் பல பகுதிகளில் மாதவிடாய் ஏற்படும் போது சீருடைகளில் குருதிக்கசிவு ஏற்படும் என்ற களங்க நிலையில் (Stigma) பெண்பிள்ளைகள் மாதாந்தம் நான்கு நாட்கள் வரை பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பதாக அட்வகேட்டா (ADVOCATA) நிறுவனத்தின் கொள்கைப் பகுப்பாய்வில் (2021) குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட கிராமங்களில் பெரும்பாலான குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் நடுத்தர வர்க்கத்தினரே. இவர்களில் கிட்டத்தட்ட 80வீதமாதனவர்களால் விலையேற்றங்களையும் கடந்து அத்தியாவசியமான மாதவிடாய் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடிகின்றது. பிரச்சினை எதுவென்றால், மாதவிடாய் பற்றிய தெளிவான அறிவூட்டல்கள் வழங்கப்படுவதில் குறைபாடுகளுள்ளன.

‘பெண்கள் அதிகளவான நேரம் ஒரே நப்கீனுடன் இருப்பதால், பல்வேறு நோய்த் தொற்றுகள் (Infections) அவர்களுக்கு ஏற்படக்கூடும். கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய், இனப்பெருக்கம் தொடர்பான நோய்கள் அவர்களுக்கு சுகாதாரமற்ற மாதவிடாய் செயன்முறைகளால் ஏற்படலாம். இது பற்றிய விழிப்புணர்வுகள் அவர்களுக்குத் தேவை’ (பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி)

மகப்பேற்றின் பின்னரான குருதிப்போக்குப் பற்றிய போதிய வழிகாட்டல்கள், ஆலோசனைகள் இளவயதுப் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை எனச் சில பெண்கள் குறிப்பிட்டிருந்தனர். பல வைத்தியசாலைகளில் நீரிழிவு நோய், புற்றுநோய் போன்ற பல நோய்களுக்குமான அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், மாதவிடாய் வறுமை பற்றிய அறிவுறுத்தல்கள் பெரும்பாலும் வைத்தியசாலையின் பொதுவான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டு இருப்பதில்லை. இன்றும்கூட பல பெண்கள் தனக்கு மாதவிடாய் ஏற்பட்டிருப்பது பற்றியோ அல்லது பொதுவான விற்பனைத் தளங்களில் மாதவிடாய் பொருட்களைக் கொள்வனவு செய்வது பற்றியோ அதிகம் கூச்சப்படுவதாக ஆய்வில் அறியக் கிடைத்தது. இந்த மனநிலை மாற்றப்பட வேண்டும்.

சகல இடங்களிலும் மாதவிடாயின் போது பெண்களுக்குத் தேவைப்படக்கூடிய வசதிகள் செய்து கொடுக்கப்படுவதன் மூலம் அவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் குறைக்கப்படலாம். மாதவிடாய் வறுமையை ஒழிக்க பல்வேறு சமூகச் செயற்பாட்டு நிறுவனங்கள் முன்னின்றாலும் கூட ஆய்வுக்குட்பட்ட குறித்த கிராமங்களில் இவ்வாறான செயற்பாடுகள் மிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

## இரு ஹெலிகொப்டர்கள் மோதிய விபத்தில்
# 10 பேர் பலி

மலேசியாவில் கடற்படை ஒத்திகையின்போது இரு ஹெலிகொப்டர்கள் மோதிய விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். மலேசியாவின் பெரக் பகுதியில் உள்ள இராணுவ தளத்தில் நடந்த LIVE ஒத்திகையின்போது ஹெலிகொப்டர்கள் விபத்து ஏற்பட்டுள்ளது.



இரு ஹெலிகொப்டர்களில் பயணித்த கடற்படை ஊழியர்கள் உள்ளிட்ட 10 பேர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர். மலேசிய கடற்படை தினத்தின் 90ஆம் ஆண்டு நிகழ்ச்சிக்காக நடந்த ஒத்திகையின்போது கோர விபத்து ஏற்பட்டுள்ளது.

புதன்கிழமை (23) காலை 9.32 மணியளவில் RMN Lumut தளத்தில் நடந்த 90ஆவது RMN நாள் அணிவகுப்பு அணிவகுப்பின் போது RMN கடல்சார் ஆபரேஷன் ஹெலிகொப்டர் (HOM-AW139) மற்றும் RMN FENNEC ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதாக ரோயல் மலேசியன் நேவி (RMN) உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த சம்பவத்தில் மொத்தம் 10 பேர் ஈடுபட்டுள்ளனர், அதாவது 7 TLDM HOM குழுவினர் மற்றும் 3 TLDM Fennec குழுவினர். பாதிக்கப்பட்ட அனைவரும் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாக உறுதி செய்யப்பட்டு, அடையாளம் காணும் செயல்முறைக்காக Lumut TLDM அடிப்படை இராணுவ மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இரண்டு ஹெலிகொப்டர்கள் தரையில் விழுந்து நொறுங்குவதற்கு முன்பு, ஹெலிகொப்டர்களில் ஒன்று மற்றொன்றின் ரோட்டரை வெட்டியது. மலேசியாவின் லுமுட் நகரில் கடற்படைத் தளம் உள்ளது. ஹெலிகொப்டர்களில் ஒன்று ஓடும் பாதையில் விழுந்து நொறுங்கியதாகவும், மற்றொன்று அருகில் உள்ள நீச்சல் குளத்தில் விழுந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.


சம்பவத்திற்கான காரணத்தை கண்டறிய TLDM ஒரு விசாரணை வாரியத்தை நிறுவும். குடும்பத்தின் உணர்திறன் மற்றும் விசாரணை செயல்முறையைப் பாதுகாப்பதற்காக சம்பவத்தின் காணொளியை ஒளிபரப்ப வேண்டாமென TLDM பொதுமக்களிடம் தெரிவித்துள்ளது.

ரோம்

## 2,777ஆவது பிறந்த நாள் விழா

இத்தாலியின் தலைநகரமான ரோம் நகரத்தின் 2,777ஆவது பிறந்த நாள் விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு அங்கு இசைக்கச்சேரி, கண்காட்சி என ஏராளமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் சுமார் 2 ஆயிரம் பேர் கலந்து கொண்ட பிரமாண்ட அணிவகுப்பும் நடைபெற்றது.

இதில் பெண்கள், சிறுவர்கள் ஆகியோர் பாரம்பரிய உடைகளை அணிந்து கொண்டு உற்சாகமாக நடனம் ஆடினர். இதனால் நகரமெங்கும் விழாக்கோலம் பூண்டது. ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் அங்கு சென்று இதனை கண்டுகளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சிங்கப்பூர்

## கள்ளக்காதலியை கொலை செய்தவருக்கு சிறை

சிங்கப்பூரில் வசித்து வரும் இந்திய வம்சாவளி நபர் ஒருவர் (வயது 40), தனது மனைவிக்கு தெரியாமல் ஒரு பெண்ணுடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்தார். வீட்டிற்கே அழைத்து வந்து அந்த பெண்ணுடன் உல்லாசமாக இருந்துள்ளார்.

2015ஆம் ஆண்டு ஒருநாள் வீட்டின் படுக்கை அறையில் இருவரும் ஒன்றாக இருந்து மது அருந்தியபோது கையும் களவுமாக மனைவி பிடித்துள்ளார். கணவனை கடுமையாக திட்டியிருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்தவர், மனைவியை அடித்துள்ளார். இதனால் பயந்துபோன மனைவி, மன்னிப்பு கேட்டதால் தாக்குதலில் இருந்து தப்பியிருக்கிறார். அதன்பின்னர், பொலிஸில் புகார் அளித்து தனக்கு பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதனால் அவரை கணவன் தாக்கவில்லை. அதேசமயம், கள்ளத் தொடர்பு வைத்திருந்த பெண்ணுடன் தொடர்ந்து குடும்பம் நடத்தியிருக்கிறார்.

இதற்கிடையே, கள்ளத் தொடர்பு வைத்திருந்த அந்த பெண்ணுக்கு வேறு சில ஆண்களுடன் தொடர்பு ஏற்பட, அவர்களுடன் உல்லாசமாக இருந்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையே பிரச்சினை உருவானது. 2019இல் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. ஒரு முறை தாக்கியபோது, அப்பெண் உயிரிழந்து விட்டாள். அந்த ஆண், பொலிஸில் சரணடைந்துவிட்டார். அவருக்கு எதிரான வழக்கில் குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் காதலியை அடித்துக் கொன்றவருக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார். அவர் கைது செய்யப்பட்ட நாளில் இருந்து தண்டனைக் காலம் தொடங்கும் என்றும் தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி



## திருநங்கை ரியா முதலிடம்

இந்தியாவின் கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற திருநங்கைகளுக்கான மிஸ் கூவாகம் 2024 போட்டியில் ஈரோட்டைச் சேர்ந்த ரியா முதலிடத்தை பெற்றுள்ளார்.

ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் சித்திரை மாத திருவிழாவில், தமிழகத்தில் இருந்து மட்டுமல்லாமல், வெளிநாடுகளைச் சேர்ந்த ஏராளமான திருநங்கைகளும் ஒன்று கூடுகின்றனர்.

மூன்று சுற்றுகளாக நடைபெற்ற இந்த அழகிப் போட்டியில் 27 திருநங்கைகள் பங்கேற்றனர். இறுதிச்சுற்றில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த உதவி மருத்துவரான ரியா முதலிடம் பிடித்து அசத்தினார்.

தெலுங்கானா

## மனைவியின் அடியை தாங்காத கணவன்

ஐதராபாத் கொம்பள்ளியை சேர்ந்த நாகேஷ் என்பவர் அப்பகுதியில் உள்ள குளத்தில் திடீரென இறங்கியுள்ளார்.

இதைப் பார்த்த அக்கம்பக்கத்தினர் குளத்தில் இறங்கியவரிடம் கேட்டபோது, தனது மனைவி தன்னை அடித்துச் சித்திரவதை செய்கிறாள். தனது குழந்தைகளிடம் பேசக்கூட அனுமதிப்பதில்லை. அப்பா இறந்து விட்டார் என தவறாகக் கூறுகிறாள் என தெரிவித்து, மனைவி அடித்ததால் ஏற்பட்ட காயங்களைக் காட்டியுள்ளார்.

மேலும், என்னால் அடி வாங்க முடியவில்லை. விவாகரத்து வாங்கிக் கொடுங்கள் என வேதனையோடு தெரிவித்துள்ளார்.




### இத்தாலிய சீரி ஏ தொடர்:
# சம்பியனாகிய இன்டர் மிலன்

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சீரி ஏ தொடரில் இன்டர் மிலன் சம்பியனாகியுள்ளது.

சான் சிரோவில் நேற்று அதிகாலை நடைபெற்ற பரம வைரிகளான ஏ.சி மிலனுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றதன் மூலமே இன்னனும் ஐந்து போட்டிகள் இருக்கையிலேயே இன்டர் மிலன் சம்பியனாகியுள்ளது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 86 புள்ளிகளை இன்டர் மிலன் பெற்றுள்ள நிலையில், இரண்டாமிடத்திலுள்ள ஏ.சி மிலன் 69 புள்ளிகளையே பெற்றுள்ளதால்; அடுத்த ஐந்து போட்டிகளில் ஏ.சி மிலன் வென்று இன்டர் மிலன் தோற்றாலும் இன்டர் மிலனை ஏ.சி மிலன் முந்த முடியாது.

இன்டர் மிலன் சார்பாக பிரான்செஸ்கோ அக்கர்பி, மார்க்கஸ் துராம் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஏ.சி மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை பிக்காயோ டொமோரி பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பொலொக்னாவுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் றோமா தோற்றது.



## ஐ.பி.எல்: மும்பையை வென்ற ராஜஸ்தான்

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), ஜெய்ப்பூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பையின் அணித்தலைவர் ஹர்டிக் பாண்டியா தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.


அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை, ஆரம்பத்திலேயே றோஹித் ஷர்மா, இஷன் கிஷன், சூரியகுமார் யாதவ், மொஹமட் நபியை ட்ரெண்ட் போல்ட், சந்தீப் ஷர்மா (2), யுஸ்வேந்திர சஹாலிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தடுமாறியது.

பின்னர் ஜோடி சேர்ந்த திலக் வர்மாவின் 65 (45), நெஹால் வதேராவின் 49 (24) ஓட்டங்கள் மூலம் ஓட்டங்களைப் பெற்ற மும்பை இறுதியிலும் போல்ட், ஆவேஷ் கான், சந்தீப் ஷர்மாவிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 179 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 180 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான், யஷஸ்வி ஜைஸ்வாலின் ஆட்டமிழக்காத 104 (60), ஜொஸ் பட்லரின் 35 (25), அணித்தலைவர் சஞ்சு சாம்ஸனின் ஆட்டமிழக்காத 38 (28) ஓட்டங்களோடு 18.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சந்தீப் ஷர்மா தெரிவானார்.

இந்நிலையில், டெல்லியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் குஜராத் டைட்டான்ஸை டெல்லி கப்பிட்டல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



## டி ஜொங்கில் ஆர்வம் காட்டும் மியூனிச்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் மத்தியகளவீரரான பிரெங்கி டி ஜொங்கைக் கைச்சாத்திடுவதில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரையில் பார்சிலோனாவுடன் 26 வயதான டி ஜொங் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள நிலையில் அவரின் உயர்ந்த ஊதியமே மியூனிச்சின் பேரம்பேசலில் தடையாக உள்ளதாகக் கூறப்படுகிறது.



### கிழக்கு மாகாண ஹொக்கி:
## வெற்றிவாகை சூடிய காரைதீவு ஹொக்கி லயன்ஸ்

வி.ரி.சகாதேவராஜா

கிழக்கு மாகாண ஹொக்கி சம்பியனாக ஐந்தாவது தடவையாக காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி வெற்றி வாகை சூடியுள்ளது.
அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியை 2–0 என்ற கோல் கணக்கில் வென்றே அம்பாறையைப் பிரதிநிதித்துவப்படுத்திய காரைதீவு ஹொக்கி லயன்ஸ் சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 24 ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.